Department of
Education

GOVERNMENT OF
WESTERN AUSTRALIA

# வாழ்க்கைத்தொழில் உரையாடல்கள்

## பெற்றோர் மற்றும் பராமரிப்பாளர்களுக்கான தகவல்கள்

பலஇளையோருக்கு சரியான வாழ்க்கைத்தொழில் பாதையைத் தேர்ந்தெடுப்பதில் அதிகளவு பரிசீலனைகளும் தேடல்களும் தேவைப்படுகிறது.

கல்வி மற்றும் வாழ்க்கைத்தொழில் ஆசைகள் ஆகியவை இளையோர் மற்றவர்களுடன் தாங்கள் எப்படிப் பொருந்திப் போகமுடியும் என்பதில் அவர்கள் எப்படிச் சிந்திக்கிறார்கள் என்பதையும் அவர்களது பெற்றோர், பராமரிப்பாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் சக தோழர்களின் எதிர்பார்ப்புகளின்படியும் வடிவம் கொள்கிறது.

இளையோரின் வாழ்க்கைத்தொழில் முடிவுகளில் முக்கிய செல்வாக்காளர்களான பெற்றோர், பராமரிப்பாளர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் மேல்நிலைப் பள்ளிக்கு மிக முன்னதாகவே வாழ்க்கைத்தொழில் உரையாடல்களைத் தொடங்கவேண்டிய தேவையுள்ளது.

ஆறு வயதிலிருந்தே குழந்தைகளின் சாத்தியமான தொழில் விருப்பங்களில் பாலினச் சார்புகள் தெளிவாக இருப்பதாக ஆராய்ச்சி காட்டுகிறது. அத்தகு பாலின நிலைப்பாடானது பையன்களைவிட இளம்பெண்கள் கணினி அறிவியல் மற்றும் பொறியியலில் குறைவான ஆர்வம் கொண்ட்வர்கள் என்ற நம்பிக்கை அதற்கொரு உதாரணமாகும்.

பலஇளையோருக்கு பலவெற்றிகரமான தொழில்வினைஞர்கள் மற்றும் வர்த்தகர்களைச் சந்திப்பதற்கான வாய்ப்பு கிடைப்பதில்லை. பணி உலகிலிருந்து பல்வகை முன்மாதிரிகளுடன் ஈடுபடுவதற்கான வாய்ப்புகள் தேவை.

CC BY
Exclusions may apply

Department of
Education

GOVERNMENT OF
WESTERN AUSTRALIA

## வாழ்க்கைத்தொழில் உரையாடல்களைச் செய்வது எப்படி?

இளையோரின் அபிலாஷைகளில் ஆர்வத்தைக் காட்டுவதன் மூலம் பெற்றோர் வாழ்க்கைத்தொழில் உரையாடல்களில் ஈடுபட முடியும். பின்வருவனவற்றைக் கவனத்தில் கொள்ளுங்கள்:

- உங்கள் இளைய நபரிடம் வாழ்க்கைத்தொழில் உரையாடல்களைச் செய்ய நேரம் ஒதுக்குங்கள்.
- உயர்ந்த விழைவுகளை ஆதரியுங்கள். 'கனவுகளை நொறுக்காமல்' இருப்பதில் கவனம் கொள்ளுங்கள்.
- குழந்தைகளின் கற்றலை வாழ்க்கைத்தொழில் வழியோடு இணையுங்கள்.
- துல்லியமான, புதிய வாழ்க்கைத்தொழில் வழிகள் மற்றும் உழைப்புச் சந்தை தகவல்களை வழங்குங்கள்.
- இளையோருக்கு எனத் திறந்துள்ள முழு அளவிலான தெரிவுகள் மற்றும் வழிகள் பற்றிய தகவல்களை அவர்களிடம் சுட்டிக்காட்டுங்கள். ஒரு சிறந்த

| இந்த வாழ்க்கைத்தொழில் உரையாடல் கேள்விகளை முயற்சித்துப் பாருங்கள் | | | |
|---|---|---|---|
| நீ உண்மையாகவே பெருமைப்படக்கூடிய உன்னுடைய சாதனை எது? | எந்தச் சாதனைகள் உனக்கு மிகவும் திருப்தியளிக்கின்றனீ? | அடுத்த ஐந்து ஆண்டுகளில் நீ என்னவாக இருப்பாய்? | உனக்கு ஆர்வமூட்டும் வேலைகளைப் பார்த்தாயா அல்லது கேள்விப்பட்டாயா? அதில் ஈர்க்கக்கூடியதாக என்ன உள்ளது? |
| உங்கள் பகுதிநேர வேலையில் என்ன திறமைகளை நீ பெற்றுள்ளாய்? | உன் கனவு வேலை வீட்டிலிருந்து வெகு தொலைவில் இருந்தால் நீ என்ன செய்வாய்? | நீ எதையாவது கற்றுக்கொள்ள வாய்ப்புக் கிடைத்திருந்தால் அது என்னவாக இருந்திருக்கும்? | எந்த உலகம் அல்லது சமூகச் சவாலை நீ தீர்க்க விரும்புகிறாய்? |

D23/0256774
பிப்ரவரி 2023

CC BY
Exclusions may apply